SG TOGETHER

# மேலும் வலிமை பெற்று எழுதல் உரையாடல்கள்

## மேலும் வலிமை பெற்று எழுவதற்கான உரையாடல்கள் – சிங்கப்பூர் மக்களாகிய நம்மைப் பற்றிய பிரதிபலிப்பு



கொவிட்-19 உலகையே ஆழமாகப் பலவழிகளில் மாற்றியமைத்துள்ளது. இது, நாம் எதை மதிக்கிறோம் என்பதையும் ஒரு சமுதாயமாக எதைத் தேடுகிறோம் என்பதையும் மீண்டும் சிந்தித்துப்பார்க்க வேண்டிய தருணமாகும்.

இதனால்தான் 'ஒன்றிணைந்த சிங்கப்பூர்' இயக்கத்தின் ஒரு பகுதியாக மேலும் வலிமை பெற்று எழுவதற்கான உரையாடல்கள் (ESCகள்) கடந்த ஜூன் 2020-இல் தொடங்கப்பட்டன. இது நம் அனைவரையும் பற்றியது, ஒருவரோடொருவருடனும் அரசாங்கங்கத்துடனும் ஒன்றாகப் பணிபுரிந்து கொவிட்-19-இன் தாக்கத்திலிருந்து மீண்டு மேலும் வலுவாக எழுதல் பற்றியதுமாகும்.

பல்வேறு பின்னணிகள் மற்றும் அனுபவங்களையும் கொண்ட 16,900க்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்கள் ESCகள் மூலமும், கருத்தாய்வுகள் மற்றும் பின்னூட்டத் தளங்கள் மூலமும் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர். இந்த உரையாடல்களைத் தாய் மொழிகளில் நடத்தியதுடன் உடற்குறையுள்ளோரையும் சென்றடைந்தோம்.

நமது உரையாடல்கள் இங்கேயே நின்றுவிடக் கூடாது. நோய்ப்பரவல் இன்னும் முடிவடையவில்லை. நாம் ஒருவருடன் ஒருவர் தொடர்ந்து உரையாட வேண்டும் என்பதுடன், எது மேலோங்கி எழுகின்றது என்பதைப் புரிந்துகொண்டு புதிய கருத்துகளையும் தீர்வுகளையும் அடைய ஒன்றாகச் செயலாற்றவேண்டும்.

சில குறிப்பிட்ட பிரச்சினைகளில் நாம் ஆழமாக மூழ்கி ஆய்வதற்கு மேற்கொண்டு கூடுதல் உரையாடல்கள் இருக்கும். முக்கியமான பிரச்சினைகளைச் சமாளிக்க நாம் ஒன்றிணைந்த சிங்கப்பூர் இயக்கத்திற்கான செயற்கூட்டணியையும்(AfA) பிற பங்காளிகளையும் உருவாக்குவோம்.

**மேலும் ஒன்றுபட்ட மக்களாக, மேலும் நியாயமான சமமான சமுதாயமாக, நாம் ஒவ்வொருவரும் மகிழ்ச்சி, செழிப்பு, மற்றும் முன்னேற்றம் காணுமிடத்திற்கான ஒரு பொதுவான நம்பிக்கையை நாம் பகிர்ந்து கொள்கிறோம்.**

## ஒரு பார்வையில் புள்ளிவிவரங்கள்



**88** ஒன்றிணைந்த சிங்கப்பூர் மேலும் வலிமை பெற்று எழுவதற்கான உரையாடல்கள்

**4,400** பங்கேற்பாளர்கள்

**12,500** கருத்தாய்வுகளில் பதிலளித்தவர்கள்

31 டிசம்பர் 2020 இல்

### முக்கிய கருப்பொருட்கள்

மேலும் வலிமை பெற்று எழுதல் உரையாடல்களில் பிரபலமான தலைப்புகள்

1 சமூக ஆதரவு 17%
2 தேசிய அடையாளமும் ஒன்றிணைந்த விழுமியங்களும் 16%
3 வேலையும் பொருளாதாரமும் 14%
4 மின்னிலக்கமும் தொழில்நுட்பமும் 10%
5 ஆளுகையும் குடிமை ஈடுபாடும் 9%
6 கல்வியும் பயிற்சியும் 8%
7 ஆரோக்கியமும் நல வாழ்வும் 6%
8 மூத்தோருக்கான பராமரிப்பு 4%
9 நமது பலதரப்பட்ட சிங்கப்பூர் சமூகம் 4%
10 சுற்றுச்சூழல் 3%
11 குடும்பம் 3%
12 இனமும் மதமும் 2%
13 தேசியப் பாதுகாப்பும் முழுமையான தற்காப்பும் 1%
14 கலையும் விளையாட்டுகளும் 0.5%
15 கட்டிடச் சூழலும்வாழ்வதற்கான தன்மையும் 0.5%

மற்றவை 2%

### பங்கேற்பாளர்களின் விவரம்

பாலினம்




இனம்




வயது



# 15 முக்கிய கருப்பொருட்கள்



## ❶ சமூக ஆதரவு

- வசதி குறைந்தவர்களின் கண்ணியம்
- எளிதில் பாதிப்புக்குள்ளாகும் பிரிவினரின் பாதுகாப்பு
- நன்கொடை வழங்குதலுக்கான ஆதரவும் தொண்டூழியமும்

## ❷ தேசிய அடையாளமும் ஒன்றிணைந்த விழுமியங்களும்

- பரிவும்இணக்கமும் கொண்ட சமுதாயம்
- மீள்திறன்மிக்க மற்றும் எல்லோரையும் அரவணைக்கும் சமுதாயம்
- வெற்றியின் பரந்துவிரிந்த விளக்கம்
- நேர்மையான உரையாடல்களுக்குக் கூடுதல் இடத்தை உருவாக்குதல்
- நமது கலாசார வளங்கள்

**பட்டறிவைப் பகிர்ந்துகொள்வோம்**

ஒன்றிணைந்த சிங்கப்பூர் மேலும் வலிமை பெற்று எழுதல் உரையாடல்களுக்குப் பதிவுசெய்யவும் சிங்கப்பூர் மக்கள் பகிர்ந்தவற்றை அறியவும் www.sg/EmergingStrongerConversations இணையதளத்திற்கு செல்லுங்கள்

## ❸ வேலையும் பொருளாதாரமும்

- மறுசிந்தனை கொண்ட வேலையும் ஊழியரணியும்
- அத்தியாவசிய ஊழியர்களுக்கான மற்றும் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் ஊழியர்களுக்கான ஆதரவு
- வேலை தேடுவோருக்கான ஆதரவு
- உள்நாட்டு நிறுவனங்களுக்கும் ஊழியர்களுக்குமான ஆதரவு
- புதிதாக வளர்ச்சிகாணும் துறைகள் மற்றும் பொருளாதார மையமாக விளங்கும் நமது நிலை
- வர்த்தகங்கள் மற்றும் பொருளாதாரத்தின் வெற்றி விளக்கம்

## ❹ மின்னிலக்கமும் தொழில்நுட்பமும்

- மின்னிலக்க இடைவெளியை அகற்றுதல்
- நமது வேலைகள், வர்த்தகங்கள் மற்றும் பொருளாதாரத்தை மறு உருவாக்கம் செய்தல்
- சிறந்த சமூக தொடர்புகளுக்கு தொழில்நுட்பத்தைப் பயன்புடுத்துதல்
- அந்தரங்கம், இணைய பாதுகாப்பு மற்றும் தவறான தகவல்பற்றிய அக்கறைகள்

## ❺ ஆளுகையும் குடிமை ஈடுபாடும்

- மேலும் அரவணைப்புமிக்க ஆளுகைக்கான குடிமக்களின் ஆழ்ந்த பங்கேற்பு
- கூடுதல் உரையாடல்களுக்கான வேண்டுகோள்கள்

## ❻ கல்வியும் பயிற்சியும்

- நமது கல்வி முறை
- வாழ்நாள் கல்வியும் பயிற்சியும்
- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான ஆதரவு

## ❼ ஆரோக்கியமும் நல வாழ்வும்

- மனநலத்துக்கு முன்னுரிமை
- நோய்த்தொற்றைச் சமாளித்தல்

## ❽ மூத்தோருக்கான பராமரிப்பு

- மூத்தோருக்கான பராமரிப்பும் ஆதரவும்
- மூத்தோருக்கான மின்னிலக்க கல்வியறிவு

## ❾ நமது பலதரப்பட்ட சிங்கப்பூர் சமூகம்

- உள்ளூர் மற்றும் வெளிநாட்டினருக்கான எல்லோரையும் அரவணைக்கும் சமூகம்
- வெளிநாட்டு ஊழியர்களைப் போற்றிப் பாராட்டுதலும் அவர்களின் நலனைக் கவனித்தலும்
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டவருக்கான மேலும் மிக வெளிப்படையான வேலைவாய்ப்பு நடைமுறைகள்

## ❿ சுற்றுச்சூழல்

- சுற்றுச்சூழல் நீடித்தநிலைத்தன்மை மீது நமது கவனத்தைச் செலுத்துதல்
- பொறுப்பான பயன்பாடு மற்றும் கழிவுப்பொருள் நிர்வாகம்
- சிங்கப்பூரின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துதல்

## ⓫ குடும்பம்

- குடும்பத்தின் முக்கியத்துவம் மற்றும் அவற்றிற்கு ஆதரவு வழங்குதல்
- சிங்கப்பூரில் குடும்ப வன்முறை

## ⓬ இனமும் மதமும்

- பலஇனம், பரஸ்பர புரிந்துணர்வு, இணக்கம் ஆகியவற்றின் முக்கியத்துவம்
- நமது கல்வி முறையில் இனமும் மதமும்
- இனம் மற்றும் மதப் பிரச்சினைகள் தொடர்பான ஆக்கப்பூர்வமான உரையாடல்

## ⓭ தேசியப் பாதுகாப்பும் முழுமையான தற்காப்பும்

- தற்காப்பின் முக்கியத்துவத்தை வலுப்படுத்துவதற்கு வாய்ப்புகள்
- முழுமையான தற்காப்பில் அதிக அடித்தளப் பங்கேற்பை ஊக்குவித்தல்
- சமூகம்சார்ந்த மற்றும் உளவியல்சார்ந்த தற்காப்பை மேலும் பரிவுமிக்க எல்லோரையும் உட்படுத்தும் சிங்கப்பூர் மூலம் வலுப்படுத்துதல்
- தேசிய சேவையாளர்களுக்கான ஆதரவை அதிகரித்தல்

## ⓮ கலையும் விளையாட்டுகளும்

- கலை மற்றும் விளையாட்டுகளை நீடித்த வகையில் நிலைநிறுத்துதல்
- கலைத் துறையைப்போற்றிப் பாராட்டுதல்

## ⓯ கட்டிடச் சூழலும்வாழ்வதற்கான தன்மையும்

- அடுக்கு வீட்டு வடிவமைப்பும் புதிய தேவைகளை நிறைவேற்றும் வகையிலான பேட்டை உள்கட்டமைப்பும்
- சிங்கப்பூரர்களுக்குத் தேவையான வீடுகளுக்கு ஆதரவளித்தல்
- நீடித்தநிலைத்தன்மைமிக்க நகரத்திற்கான பேரார்வங்கள்
- மிகவும் மீள்திறன்மிக்க ஒருங்கிணைந்த கட்டிடத் துறை(BE)

“முன்பே முடிவுகள் செய்யப்படாத, பாதுகாப்பான இடத்தில் என் கண்ணோட்டத்தைப் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பை நான் போற்றிப் பாராட்டுகிறேன். ஏற்பாட்டாளர் உற்சாகம் ஊட்டுபராக இருந்தார். இளையோர், மூத்தோர் ஆகிய இரு சக சிங்கப்பூரர்களுடனும் தொடர்பு கொள்ளவும், அவர்களின் கனவுகள் மற்றும் நம்பிக்கைகள் கலந்த கதைகளைக் கேட்கவும் முடிந்தது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது, அது எனக்கு ஊக்கமூட்டுவதாக அமைந்தது.

இளைய தொண்டர் என்ற அடிப்படையில், இளையர்களிடம் பேச நிறைய நேரத்தைச் செலவளிக்கிறேன்; அவர்களின் அக்கறைகள், தேவைகள், அச்சங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றைச் செவிசாய்த்துக்கேட்கிறேன். நான் ESC-இல் பதிவு செய்துகொண்டேன். அதன் மூலம் இந்த அச்சங்கள், தேவைகள் மற்றும் விருப்பங்கள் ஆகியவற்றை முடிவு எடுப்பவர்களிடம் எடுத்துரைக்க முடிகிறது. மேலும் நான் மற்றவர்களின் கருத்துகள், சிந்தனைகள் மற்றும் யோசனைகளையும் கேட்க விரும்பினேன். சமூகத்தைக் கட்டி உருவாக்குபவர் என்ற முறையில், நமது மக்களின் வேதனைகள் மற்றும் நம்பிக்கைகளை நாம் புரிந்துகொள்வது முக்கியம். அதன் மூலம் தலைவர்கள் என்ற முறையில், மேலும் பரிவுமிக்க, எல்லோரையும் உட்படுத்தும் மற்றும் மீள்திறன்மிக்க சிங்கப்பூரை உருவாக்க திட்டங்களை வடிவமைத்து



**DRUGA RAJENDRAN**
மேலாண்மை ஆலோசகர்

“ஒருவரோடொருவர் தொடர்புகொண்டு உறவாடுவது முக்கியம். அவ்வாறு செய்வதால், கடுமையான காலங்களில் நமது குடும்பம், அக்கம்பக்கத்தார், மற்றும் நண்பர்களிடமிருந்து ஆதரவுபெற்று, நாம் ஆக்ககரமாகவும் ஊக்கமுடனும் இருக்க முடிகிறது.

உண்மையில், இந்த உரையாடல்களில் சேர, கருத்துகளப் பகிர, மற்றவர்கள் கூறுவதைக் கேட்க நமக்கு மேலும் அதிக சிங்கப்பூரர்கள் தேவைப்படுகின்றனர். தொடர்புகொள்வதற்கான வழிமுறைகள் நம்மிடம் ஏற்கனவே உள்ளன. உங்கள் பங்கை ஆற்ற, நீங்கள் எவ்வளவு வயதானவர், உங்களின் பின்னணி என்ன என்பது ஒரு பொருட்டல்ல. உங்களின் “சுவர்கள், கேடயங்கள்,பாதுகாவல்கள்” ஆகியவற்றை அகற்றிவிட்டால் உங்களால் எவ்வளவு கற்றுக்கொள்ள முடியும் என்பதை அறிந்து ஆச்சரியப்படுவீர்கள். உங்களைவிட பெருமளவில் மாறுபட்ட ஒருவருடன் எளிமையான உரையாடலில் உங்களால் ஈடுபட முடியும்.”



**MOHAMMED SHABIRIN BIN ARIFFIN**
கல்வியாளர்